14.11.2022 அ.வ.எண்.195/2019 வா.சா.1

பெயர்.திரு:- ஜான்

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

எனது தகப்பனாரான ஜோசப்புக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது தாயாரான முதல் மனைவி மூலம் நானும், எனது அண்ணாவான சாந்தராஜ் ஜோசப்பும் வாரிசுகள் ஆவோம். 2ம் மனைவிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 வாரிசுகள் ஆவார்கள். மேற்படியார்கள் ராஜம்மாள், கமலம்மாள், பாக்கியம் ஆவார்கள். நான் 1964ல் தாவா சொத்தை கிரயம் வாங்கும்போது எனது தகப்பனார் உயிருடன் இருந்தார். எனக்கும், எனது சகோதரான சந்தராஜ்க்கும் கார்டியான எனது தகப்பனாரின் 2வது மனைவி இருந்தார் என்று சொன்னால் சரிதான். 1964ல் சொத்தை கிரயம் வாங்கும்போது நான் இளவர் ஆவேன். 1964ல் சொத்தை வாங்கும்போது எனக்கும், எனது சகோதரருக்கும் மேற்படி சொத்தை கிரயம் பெறும் அளவிற்கு பணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி சொத்தை கிரயம் பெறும் சமயம் எனது பெற்றோருக்கு போதிய வசதி இருந்தது. என்னுடைய தகப்பனார் மற்றும் அவரது 2வது மனைவியான கிரிஜா கேம்பம்மாவின் வருமானத்தைக்கொண்டுதான் மேற்படி சொத்து கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரிஜா கேம்பம்மா வீட்டில்தான் இருந்தார். வேலைக்கு செல்லவில்லை. எனது தாயார் எலிசபெத் மேற்படி கிரயம் பெறுவதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயாரின் வருமானத்தை கொண்டுதான் மேற்படி சொத்தை கிரயம் பெற்றோம் என்று குறிப்பிட்டு நிலையில் மேற்படி கிரய சமயத்தில் என்னுடைய தாயார் உயிருடன் இல்லாத நிலையில் மேற்சொன்னவாறு சாட்சியம் அளித்துள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் இறக்கும்போது அவரிடம் இருந்த எனது தகப்பனாரிடம் கொடுத்து வைத்தார். அந்த பணத்தை கொண்டுதான் கிரயம் பெற்றார். மேற்படி பணத்தின் மூலம் எனது தகப்பனார் மேற்படி சொத்தை கிரயம் பெற்றிருந்ததால் மேற்படி ஆவணத்தில் எனது தகப்பனாரோ கார்டியனாக இருந்திருப்பார் என்றும், மேற்சொன்னவாறு கிரயம் பெறாததால்தான் கிரிஜாவின்

கேம்பங்மமா பெயர் மேற்படி ஆவணத்தில் பாதுகவலாக இருந்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் எங்களை பார்த்து கொண்டதால் அவரது பெயரை சேர்த்துள்ளோம். வாதி ரத்தினம்மாள் பெங்களூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் மைசூரில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். வாதி ரத்தினம்மாள் அவரது கணவரின் இறப்பிற்கு பிறகு வாரிசு சான்றிதழ் ஏதேனும், தாக்கல் செய்துள்ளரா என்றால் இல்லை. அதைபோன்று, ரத்தினம்மாளின் வாரிசுகள் பொறுத்த வரை ஆட்சேபனை இல்லை என்று பிரமாணப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். மேற்சொன்னவாறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எந்த காலை எண்ணில் உள்ள ொசத்தை அனுபவித்து வருகிறேன் என்றால் சர்வே எண்.182 ல் உள்ள சொத்தை அனுபவித்து வருகிறேன். எனக்கு சர்வே எண் தெரியாது என்னும், மேற்படி தாவா சொத்தை நான் அனுபவைத்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல. நான் அனுபவித்து வருவதாக சொல்லும் சொத்தில் சிக்குதாயாம்மாள் அனுபவித்தில் உள்ளார் என்றால் சரியல்ல. நான்தான் அனுபவித்தில் உள்ளேன். எந்த சர்வே எண் அடிப்படையில் 1964 வருடத்தில் கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் பழைய க.ச.எண்.139 ல் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள மொழிபெயர்ப்பு நகலில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 39/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாவா சொத்தில் அனுபவித்தில் உள்ளதை பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் மேற்படியார்கள் 2020 ல் தடுத்தார்கள். நான் இளவராக இருக்கும்போது தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ள நிலையில் எந்த வருடத்தில் தாவா சொத்தின் அனுபவித்தில் வந்தேன் என்றால் 1964 லிருந்து அனுபவித்தில் இருந்தேன். நான் நீதிமன்றத்தில் எத்தனை கந்தாய ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது ரத்தினாம்மாவுக்குத்தான் தெரியும். நான் நீதிமன்றத்தில் 3 கந்தாய ரசீதுகள்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும்,

1964 வருடத்திய ஆவணமானது பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் 3ம் பிரதிவாதியான ராஜம்மாள் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாவா சொத்தைத அனுபவித்திருந்தால் 1964 வருடத்திலிருந்தே கந்தாய ரசீதுகள் தாக்கல் செய்திருப்போம் என்றும், அவ்வாறு அனுபவத்தில் இல்லாததததால்தான் எங்கள் பெயரில் உள்ள மேற்படி வருடங்களுக்குரிய கந்தாய ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் பெயரில் மேற்படியார்கள் கந்தாயம் செலுத்தி வந்தார்கள். நாங்கள் கேட்டும் அவர்கள் கொடுக்கவில்லை. தாவா சொத்தைபொறுத்து எனது பெயருக்கு பட்டா மாறுதல் குறித்து உத்தரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்குரைஞரிடம் கொடுத்துள்ளேன். என்னை பிரதிவாதிகள் தடுக்கவில்லை என்றும், பிரதிவாதிகள் என்னை தடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால்சரியல்ல. வில்லங்க சான்றை எத்தனை வருடங்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது ரத்தினம்மாளிடம் உள்ளது அவர்களைத்தான் கேட்கவேண்டும். 1964 வருடத்தில் கிரய ஆவணமானது பெயர் அளவிலான ஆவணம் என்பதால்தான் நான் 1964ம் வருடத்திலிருந்து வில்லங்க சான்றை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் பெயர் அளவிலான ஆவணம் என்பது எனக்கு தெரியும் என்பதால்தான் தாவா சொத்தின் சர்வே எண்ணை நான் சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால்தான் மேற்படி சொத்திற்கு பிரதிவாதிகளும் கந்தாயம் செலுத்தி வருகிறார்கள் மேற்படி சொத்தில் எனக்கு 2/5ல் பங்குதான் உரிமையுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு 2 பங்குதான் அனுபவம் இருக்கும் என்றும், மீதி பங்கை பொறுத்து பிரதிவாதிகளுக்கு அனுபவம் என்றும், மேற்படி சங்கதியை மறைத்து நான் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு உரிமையானது என்று சொன்னால் மேற்படி சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கோரிருப்பேன் என்றும், மேற்சொன்னவாறு இல்லாத காரணத்தினால்தான் விளம்புகை பரிகாரம் நான் இவ்வழக்கில் கோரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.